செய்தி வெளியீட்டு எண்–253 நாள்– 22–3–2010

# செய்தி வெளியீடு

## போலி மருந்துளைத் தயாரிப்பவர்கள் மற்றும் காலாவதியான மருந்துகளை விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆணை!

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (22–3–2010), தமிழகத்தில் போலி மருந்துகளைத் தயாரிப்பவர்கள் மற்றும் காலாவதியான மருந்துகளை விற்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது குறித்து, காவல் துறை மற்றும் மருத்துவத் துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார். போலி மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்வதோடு, காலாவதியான மருந்துகளையும் விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் மருந்துக் கடைகளில், காவல் துறை மற்றும் மருத்துவத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் கூட்டு ஆய்வு செய்து, இப்பிரச்சினையை அடியோடு களைய உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று துறை அதிகாரிகளுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டார். மேலும், மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையை, வலுவுள்ள துறையாகத் தரமுயர்த்த வேண்டுமெனவும், பொது மக்களுக்கு மருந்துகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வண்ணம், மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை அவ்வப்போது பொது மக்களுக்குத் தேவையான எச்சரிக்கை அறிவிப்புகளை வெளியிட வேண்டுமெனவும் முதலமைச்சர் அறிவுறுத்தினார். இதுபோன்ற குற்றச் செயல்களில் நேரடியாக ஈடுபடுபவர்கள் தவிர, மூளையாகச் செயல்படுபவர்களையும், மற்ற மாநிலங்களில் இருந்து இக்குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களையும் கண்டறிந்து, அவர்கள்மீது கடுமையான குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளவும் முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தலைமைச் செயலர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப., காவல் துறை தலைமை இயக்குநர் திருமதி லத்திகா சரண், இ.கா.ப., கூடுதல் காவல் துறை இயக்குநர் திரு. கே. ராதாகிருஷ்ணன், இ.கா.ப., சென்னைக் காவல் ஆணையாளர் திரு. டி. இராஜேந்திரன், இ.கா.ப., மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை இயக்குநர் திரு. மி. பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,

சென்னை–600 009.